## கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# வாக்களிப்பு அவசியம் குறித்த கலை நிகழ்ச்சி!

## மெட்ரோ பயணிகள் கண்டு ரசித்தனர்!!

சென்னை, மார்ச்.15

கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில் இன்று சட்டபேரவை பொதுத்தேர்தல் 2021–ல் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த பல்சுவைவிழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொது மக்களுக்கு மெட்ரோ ரெயிலில்பயணிக்கும்பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வைஏற்படுத்துவதன் ஒருபகுதியாக மெட்ரோ ரெயிலில்பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப்பயணிகளுக்குதெரிவிக்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில்கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான பல்சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

மேலும் நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2021–ல் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பல் சுவை விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்நிமிர்வு கலையகம்அமைப்புடன் இணைந்து இன்று கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில்

(தெருநிலை) வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல்தடுப்புகுறித்தபல் சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.